விலை சதம் 5

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 6

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒற்றுமைப்பட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை மீ 4உ புதன்கிழமை — Colombo, November 19, 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 5 | இதழ் 169

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Phone: 3411

திரிகோணமலைத் தளம் இந்தியாவுக்கு தேவைப்படலாம்!

பிரிட்டனுடன் இலங்கைத் தலைவர்களின் ஒப்பந்தம்

இந்தியாவைக்கலந்தாலோசியாது செய்யின் பேராபத்து ஏற்படும்

பண்டித நேருவைக் கலந்து பேசிய பிறகே பர்மா பிரிட்டனுடன் ஒப்பந்தம் செய்தது

திரிகோணமலை, நவ. 18

"இந்தியாவின் தனிப் பெருந் தலைவர்களாகிய மகாத்மா காந்தி, பண்டிட் நேரு முதலியவர்களுடன் கலந்து ஆலோசியாது இலங்கைத் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்து கொள்ளும் எத்தகைய ஒப்பந்தமும் புத்தியின் பாற்பட்டதல்ல; மிகவும் அபாயகரமானதுமாகும்."

இவ்வாறு சென்னை சட்டசபை அங்கத்தவரான திரு. எஸ். ஏ. தேவநாயகம் அவர்கள் திரிகோணமலையிலுள்ள பெரிய மைதானத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த நேரு ஜெயந்தி விழாவில் பேசியபோது கூறினார்.

தொடர்ந்து திரு தேவநாயகம் சொல்லியதாவது:-

"பர்மாவின் சுதந்திர ஒப்பந்தம் லண்டனில்தான் நடைபெற்றாலும் பர்மிய தலைவர்கள் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்வதற்கு முன் இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்துத்தான் செய்தார்கள்.

'இந்தியா, இலங்கையின் அயல் நாடு. இலங்கை இந்தியாவையே உதவிக்கு என்றுப எதிர்பார்க்கவேண்டும்.

"சுதந்திரத்திற்காக இலங்கையர்கள் யுத்தஞ் செய்தால், இந்தியா உதவி செய்ய எப்பொழுதும் காத்திருக்கின்றது"

காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியதாவது:-

"இந்தியாவின் தேவைக்காக திரிகோணமலை கடற்படைத் தளத்தை இந்தியப் பிரதம மந்திரி விரும்பக்கூடும். அவ்விதப் பிரதம மந்திரியாகிய பண்டிட் நேரு திரிகோணமலையைக் கேட்டால், திரிகோணமலை மக்கள் அதையிட்டு என்ன செய்வார்களோ என்று நான் யோசிக்கவேண்டியிருக்கிறது"

மேலும் திரு செல்வநாயகம் சொன்னதாவது:-

"இந்தியர்கள் மகத்தான தியாகங்களைச் செய்துதான் சுதந்திரம் பெற்றார்கள். ஆனால் இலங்கைக்கு மிகுந்த அவசரத்துடன் 'சுதந்திரம்' கொடுப்படுகின்றது. பிரிட்டிஷார் சந்தோஷமாக இருக்கவில்லையென்பதையே இது காட்டுகின்றது.

"இடதுசாரிகள் தென் இலங்கையிலும், தமிழர் வடக்கிலும், கிழக்கிலும் பலம்பெறுகிறார்கள் என்பதை பிரிட்டிஷார் உணர்ந்து விட்டார்கள். இந்திய டொமினியனுடன் இவர்கள் எந்த நேரத்திலோ ஒரு கூட்டரசாங்கத்தை [பெடரல் அரசாங்கம்] வேண்டிநிற்கக்கூடும் என்பதையும் பிரிட்டிஷார் உணர்ந்திருக்கின்றனர்."

தொடர்ந்து திரு செல்வநாயகம் கூறியதாவது:-

"இந்தியாவின் சுதந்திர ஒப்பந்தம் லண்டனில்தான் நடைபெற்றாலும் பர்மிய தலைவர்கள் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்வதற்கு முன் இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்துத்தான் செய்தார்கள்.

'இந்தியா, இலங்கையின் அயல் நாடு. இலங்கை இந்தியாவையே உதவிக்கு என்றுப எதிர்பார்க்கவேண்டும்.

"சுதந்திரத்திற்காக இலங்கையர்கள் யுத்தஞ் செய்தால், இந்தியா உதவி செய்ய எப்பொழுதும் காத்திருக்கின்றது"

காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியதாவது:-

"இந்தியாவின் தேவைக்காக திரிகோணமலை கடற்படைத் தளத்தை இந்தியப் பிரதம மந்திரி விரும்பக்கூடும். அவ்விதப் பிரதம மந்திரியாகிய பண்டிட் நேரு திரிகோணமலையைக் கேட்டால், திரிகோணமலை மக்கள் அதையிட்டு என்ன செய்வார்களோ என்று நான் யோசிக்கவேண்டியிருக்கிறது"

மேலும் திரு செல்வநாயகம் சொன்னதாவது:-

"இந்தியர்கள் மகத்தான தியாகங்களைச் செய்துதான் சுதந்திரம் பெற்றார்கள். ஆனால் இலங்கைக்கு மிகுந்த அவசரத்துடன் 'சுதந்திரம்' கொடுப்படுகின்றது. பிரிட்டிஷார் சந்தோஷமாக இருக்கவில்லையென்பதையே இது காட்டுகின்றது.

"இடதுசாரிகள் தென் இலங்கையிலும், தமிழர் வடக்கிலும், கிழக்கிலும் பலம்பெறுகிறார்கள் என்பதை பிரிட்டிஷார் உணர்ந்து விட்டார்கள். இந்திய டொமினியனுடன் இவர்கள் எந்த நேரத்திலோ ஒரு கூட்டரசாங்கத்தை [பெடரல் அரசாங்கம்] வேண்டிநிற்கக்கூடும் என்பதையும் பிரிட்டிஷார் உணர்ந்திருக்கின்றனர்."

திரு வாளர்கள் எஸ். இராமநாதன், வீ. ஏ. ஒபயதுல்லா, குமாரி பி. இராஜராஜேஸ்வரி, டாக்டர் ருக்மணி லட்சுமிபதி முதலியோரும் பேசினார்கள்.

மத்திய மார்க்கெட் அமைப்பதற்கு இந்துக்கள் எதிர்ப்பு

ஆலயத்துக்குப் பக்கத்தில் வைக்கப்படாதாம்

பதுளை, நவ. 18

பதுளை அர்பன் சபையின் விசேஷ கூட்டமொன்று திரு. எஸ். ஏ. பீரிஸ் தலைமையில் நடைபெற்றது. நகர நிர்மாண அதிகாரியால் வகுக்கப்பட்ட திட்டத்தில் மத்திய மார்க்கெட்டை அமைக்க குறிக்கப்பட்ட இடத்துக்கருகே இந்துமத கோவில் இருப்பதால் இந்துக்கள் இதனை ஆட்சேபித்து விண்ணப்பித்துள்ள விஷயம்பற்றி இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. விவாதத்தின் பின் வெலகடேயிலுள்ள மார்க்கெட்டைத் திருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டது. தினசரிச் சம்பளத்திட்ட தொழிலாளர்களுக்கு சம்பளத்திட்ட அறிக்கைப்படி சம்பளம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இன்றைய பொதுக்கூட்டம்

கொழும்பு, நவ. 19

இன்று பிற்பகல் 4-30 மணிக்கு கால்பேஸ மைதானத்தில் இலங்கை கமியூனிஸ்டு கட்சியின் கூட்டமொன்று டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தலைமையில் கூடுகிறது. இதில் சேனநாயக்கா அரசாங்கத்தை வீழ்த்தி உண்மைச் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு புதிய அரசாங்கம் நிறுவுவதுபற்றி கமியூனிஸ்டு கட்சி பார்லிமெண்டு அங்கத்தினர்களான திருவாளர்கள் கெனமன், குமாரசிரி, லக்ஷ்மன் ராஜபக்ஷ, டபிள்யூ. பி. ஏ. விக்கிரமசிங்கா, ஹாரி அபயசுந்தர முதலியோரும் சென்ட்ரல் ஜயசேனவும் கே. ராமநாதனும் பேசுவார்கள் என்று தெரிகிறது.

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம்

புதிய நகல் சட்ட திட்டங்கள்

(நமது சொந்த நிருபர்)

கொழும்பு, நவ 18

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம் (ஜெனரல் கிளரிக்கல் சர்வீஸ் யூனியன்) தன் புதிய சட்ட திட்டங்களின் நகலை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இது நவம்பர் 22-ம் தேதி நடக்கவிருக்கும் பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறியப்படுகிறது. இவ்வறிக்கைக்கு சங்கத் தலைவர் திரு டி. எஸ் ஜயவர்த்தனவும் காரியதரிசி திரு. எஸ் என்னிய சிங்கமும் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

தமது முகவுரையில் தலைவரும் காரியதரிசியும் குறிப்பிடுவதாவது:—

"அரசாங்க உத்தியோக உலகம் சம்பந்தப்பட்டமட்டில் நம்மை ஒரு கிரஹணம் போன்றது ஒன்று கடந்த 5 மாதங்களாக பீடித்திருந்தது. அக்டோபர் 30-ம் தேதிதான் சங்கத்தின் அங்கீகாரம் எமக்கு மீண்டும் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. கிரஹணம் பிடித்தபோது அரசாங்க உத்தியோகரீதியான கண்களில் நாம் சிறிதாகவும் பொருட்படுத்த முடியாமலும் விளங்கினோம். ஆயின் இக்காலத்தில் தான் நாம் பொதுமக்களின் பார்வையில் படலானோம்."

வேலைநிறுத்தங்கள் சம்பந்தமாக நகல் சட்டதிட்டம் பின்வருமாறு கூறுகிறது:- சங்கப் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து வோட்டளிக்கும் அதிகாரமுள்ளவர்களில் நூற்றுக்கு 50 பேராவது சமுகமளித்து வோட்டளித்து அவர்களில் குறைந்தது நூற்றுக்கு 75 வீதமானவர்களாவது சாதகமாக வோட்டுத் தந்தால் அல்லாமல் சங்கம் பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கக் கூடாது."

வீட்டில் தீ

ஏழு குழந்தைகளும் தாயும் தப்பினர்

ஜாஎல, நவ. 18

இங்கு டெலதுர என்னுமிடத்தில் உள்ள ஒரு வீட்டில் தீப்பிடித்துக்கொண்டது. 500 ரூபாய் பெறுமதியான பொருட்கள் இதன் காரணமாக சாம்பலாகியது. வீட்டில் துயின்று கொண்டிருந்த ஏழு குழந்தைகளும் தாயும் எவ்வித ஆபத்துமின்றி தப்பிவிட்டனர். தீ ஒரு மண்ணெண்ணெய் விளக்கில் இருந்தே ஆரம்பித்தது.

நகவல் இலாகா டைரக்டர்

திரு. பி நடேசன் நியமனம்

கொழும்பு, நவ. 18

தொழில் இலாகா உதவி கட்டுப்பாட்டதிகாரியாக இருக்கும் திரு. பி நடேசன் ஸி. ஸி. எஸ். இப்பொழுது தகவல் இலாகா டைரக்டராக நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சென்னை மாஜிசுகாதார மந்திரி கொழும்பு விஜயம்

ஸ்ரீமதி. ருக்மணி லட்சுமிபதி

கொழும்பு, நவ. 18

சென்னை சர்க்கார் மாஜி சுகாதார மந்திரி ஸ்ரீ ருக்மணி லட்சுமிபதியும் சென்னை சட்டசபை அங்கத்தினர் திரு எஸ். ஏ. தேவநாயகமும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் திரு வி. எம். ஒபயதுல்லாவும் இன்று காலை கொழும்பு வந்தனர். மருதானை ரயில்வே ஸ்டேஷனில் அவர்களை திரு ஏ. அனீஸ், திரு கே. ராஜலிங்கம் (பாராளுமன்றப் பிரதிநிதி) முதலியவர்கள் வரவேற்றனர். அவர்கள் வார்ட் பிளேஸிலுள்ள திரு எஸ். ஆர் எம் வள்ளியப்ப செட்டியார் இல்லத்தில் விருந்தினர்களாகத் தங்கியிருக்கிறார்கள்.

காணி தகராறு கொலையில் முடிந்தது

எதிரிக்கு மரண தண்டனை

கொழும்பு, நவ. 18

மீரிகம பகுதியில் தலையான பதுவா என்னுமிடத்தில் காணித் தகராறு காரணமாக கடந்த வருடம் (1946) அக்டோபர் மாதம் 9-ம் தேதி பி. வி. ஆர். ஜோகானிஸ் பெரேரா என்பவரை கொலை செய்தது காரணமாக அதேயிடத்தைச்சேர்ந்த டபிள்யூ. பி. பெர்னான்டோ என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிக்கு நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

மீன்பிடி தொழிலுக்கு சர்க்கார் உதவி வேண்டும்

அனுபவமற்ற அதிகாரிகளால் இதனை நடத்த முடியாது

தேசிய மயமாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு

கொழும்பு நவ. 18

மீன்பிடி தொழிலை தேசியமயமாக்குவதற்கும் சில பகுதிகளில் எதிர்ப்பு இருப்பதாக தெரிகிறது. கொகுவல மீன்பிடியாளர் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். அரளப்பு என்பவர் இதுபற்றி பேசுகையில், மீன்வர்த்தகத்தில் மீன்கள் விநியோகம் திருப்திகரமாக நடத்தப்படவேண்டின் கட்டுப்பாடு அவசியமென்றும் ஆனால் இதற்கு சர்க்கார் மீன்பிடியாளருக்கு உதவி யளிக்க வேண்டுமேயன்றி தனியே சர்க்காரே நடத்துமுன் வரப்படாதென்றும் கூறினார். மீன்பிடி தொழிலில் அனுபவமுள்ளவர்களாலேயே இத்தவர்த்தகம் நடத்தப்பட வேண்டுமென்றும் அனுபவமில்லாத அதிகாரிகள் இதில் தலையிடப் படாதென்றும் இலங்கை முழுவதும் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடி கூட்டுறவு சங்கங்கள், விற்பனை ஸ்தாபனங்கள் முதலியற்றை ஏற்படுத்த சர்க்கார் உதவிபுரிய வேண்டுமென்றும் கூறினார். மேலும் சர்க்கார் மீன்பிடி தொழிலாளருக்கு அளிக்க வேண்டிய உதவிகள் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

பெர்னாட்ஷா மெச்சிய இலங்கை சின்னம்

மாயமாய் மறைந்ததா?

(நமது சொந்த நிருபர்)

கொழும்பு, நவ. 18

லண்டனிலுள்ள இலங்கை மாளிகையில் வைக்கப்பட்டிருந்த இலங்கைச் சின்னம் (கிறெஸ்ட்) 1940ல் இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

அது இப்போது மாயமாக மறைந்துபோய்விட்டதாம்

வாணி எனுமலையாலும், பித்தளையினாலும் ஓர் லண்டன் கம்பெனியினால் தயாரிக்கப்பட்ட இச்சின்னம் இலங்கை மாளிகைக்கு வருபவர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து வந்தது. பிரபல நாடகாசிரியரான பெர்னாட்ஷா இதன் அழகை வியந்து பாராட்டியுள்ளார்.

தற்காலிகமாக இலங்கை மாளிகை சிறிதுகாலம் மூடப்பட்டது. அப்போதே இது இலங்கைக்கு வந்து சேர்ந்தது. சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து இலங்கை மீண்ட தொழில் வர்த்தக இலாகா தற்காலிக டைரக்டர் திரு சோம சுந்தரம் இலங்கை மாளிகைக்கு இதனை அனுப்பி அனுப்பும் நோக்கத்துடன் முன்னர் லண்டனிலிருந்த இலங்கை தொழில் கமிஷனரின் காரியாலய உதவி உத்தியோகஸ்தரிடம் விசாரித்ததாகவும் அவர் அது தொழில் வர்த்தக இலாகாவுக்கு 1940ல் அனுப்பப்பட்ட விபரத்தைக் கூறியதாகவும் தெரிகிறது. இதன்பேரில் ஒரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டதாம். குறித்தலண்டன் காரியாலய உதவி உத்தியோகஸ்தர் தற்போது வர்த்தக தொழில் இலாகாவில் கடமை புரிந்து வருகிறார்.

விசாரணையின்போது தொழில் வர்த்தக டைரக்டரின் காரியாலயத்தில் இச்சின்னம் இருந்ததாகவும், அதனை அக்காலப் பிரதம காரியதரிசி தமது காரியாலயத்திற்கு இதனை அனுப்பிவிடும்படி கேட்டுக் கொண்டதாகவும் தெரிகிறது. இப்பிரதம காரியதரிசி இப்போது கடமையிலிருந்து விலகிவிட்டார்.

இக் காரியாலயத்திலிருந்தே சின்னம் மாயமாய் மறைந்தது.

பிரதம காரியதரிசி இது சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்தினார். அப்போது ஒரு காரியாலய சிப்பந்தி முன்னர் கடமையாற்றிய ஒரு தலைமைக் குமாஸ்தாவின் உத்தரவுப் பிரகாரம் தான் அதனைக் கடிபெடுத்து கோட்டை ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அவரிடம்கொடுத்ததாகக் கூறியுள்ளாராம்.

இத்தலைமை குமாஸ்தா ஓர் வைதிய சபையின் முடிவுப் பிரகாரம் தமது பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளாராம்.

இந்தியா பாராளுமன்றக் கூட்டம்

திரு. மாவலங்கர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்

டாக்டர் ராஜேந்திர பிரசாத் காங்கிரஸ் தலைவரானார்

புதுடில்லி, நவ. 17

இன்று பகல் 11 மணிக்கு இந்தியாவின் பாராளுமன்றம் (அரசியல் நிர்ணய சபை) டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் கூடியது. அரசியல் நிர்ணய சபை பாராளுமன்றமாக மாறுவதாலும் டாக்டர் ராஜேந்திர பிரசாத் இந்திய சர்க்கார் மந்திரியாக இருப்பதாலும் இந்தியா பாராளுமன்றத்திற்குப் புதிய தலைவர் தெரிந்தெடுக்க வேண்டியதாக இருந்தது. இன்று திரு ஜி. வி. மாவலங்கர் இந்தியா பாராளுமன்றத்திற்கு ஏகமனதாக "ஸ்பீக்கரா"கத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியா பாராளுமன்றத்தில் சர்க்கார் கட்சித தலைவர் என்ற ஹோதாவில் திரு. மாவலங்கர் "ஸ்பீக்கரா"கத் தெரிந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டிப் பேசினார்.

இந்தியாவில் சரித்திர சம்பவங்கள் அடுத்தடுத்து மாறி மாறி நிகழ்ந்து வருவதாகவும் சென்ற காலத்தில் எத்தனையோ பிரச்னைகளைச் சமாளித்து விட்டதாகவும் எதிர்காலத்தில் சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் மகத்தானவையாக இருக்கின்றனவென்றும் பண்டித நேரு தெரிவித்தார் தன்னை "ஸ்பீக்கரா"கத் தெரிந்தெடுத்ததற்காக திரு மாவலங்கர் நன்றி தெரிவித்துப் பேசியபோது உலக சமாதானத்திலும் உலக சுபீட்சத்திலும் இந்தியா பங்குபற்ற உரிமை கொண்டிருக்கிறதென்றும இவ்விஷயத்தில் இந்தியாவின்பாராளுமன்றம் ஜனநாயக முறைப்படியுள்ள சம்பிரதாயங்களையும் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் கடைப் பிடிதொழுகும்படி செய்வதில் தான் உதவி செய்வதாகவும் தெரிவித்தார்.

மசோதாக்கள்

அந்நியர்கள் கட்டுப்பாடு சம்பந்தமாக உள்நாட்டு மந்திரி சர்தார் வல்லபாய் படேல் ஒரு மசோதா கொண்டுவந்தார். அந்நியர்கள் அடிக்கடி தங்கும் விடுதிகளையும் ஹோட்டல்களையும் மூடுவதற்கும் அம்மசோதாவில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்நிய நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு சம்பந்தமாக நிதி மந்திரி திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டி ஒரு மசோதா கொண்டுவந்தார். இரு மசோதாக்களும் நிறைவேறின.

புதிய காங்கிரஸ தலைவர்

புதுடில்லி, நவ. 17

இன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் அமைப்பு, காங்கிரஸின் லட்சியங்கள் முதலியவைகள் பற்றி பல தீர்மானங்களை நிறைவேற்றியது. காங்கிரஸ் தலைவர் ஆச்சாரிய கிருபளானி ராஜினாமாவை கமிட்டி ஏற்றுக் கொண்டு அவருக்குப் பதில் டாக்டர் ராஜேந்திர பிரசாதை காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுத்தது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் இந்திய சர்க்காரிலுள்ள மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிட்டு காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதாக கமிட்டிக்குத் தெரிவித்தார்.

காஷ்மீர்

ஸ்ரீநகர், நவ. 17

காஷ்மீர் உதவி பிரதம மந்திரி குலாம் முகம்மது அப்துல்லா, கிராமங்களில் சென்று ஜனங்களுக்கு நம்பிக்கையூட்ட பிரசாரம் செய்து வருகிறார் படையெடுத்து வந்த கொள்ளைக்காரர் இருவரைப் பிடித்து கிராமவாசிகள் கூட்டத்தில் நிறுத்தி இவர்களை என்ன செய்வது என்று அவர்கேட்டதற்கு, 'சுட்டுத்தள்ளுங்கள்' என்று கிராமவாசிகள் பதிலளித்தனர்.

பூஞ்ச்- இர்பூர் பகுதியிலுள்ள காஷ்மீர் சர்க்கார் துருப்புகள் எதிரிகளைப் பலமாக எதிர்த்து நிற்கிறார்கள். கோட்லியிலுள்ள ராணுவக் கோட்டை மீது எதிரிகள் பீரங்கிப் பிரயோகம் செய்தனர். எதிரிகள் வீடுகளைக் கொளுத்தி பெண்களைத் தூக்கிக்கொண்டு சென்றனர். இந்தியத் துருப்புகளுக்கு இந்திய ராணுவ விமானங்கள் உதவிசெய்து வருகின்றன.

காஷ்மீரிலிருந்து பின்வாங்கிய மலைஜாதியினர் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலுள்ள அபோத்தாபாத் மீண்டும் காஷ்மீர் மீது படையெடுக்க ஆயத்தம் செய்வதாக காஷ்மீர் போட்டி சர்க்கார் பிரதிநிதி தெரிவிக்கிறார்.

கல்லூரி தலைமை ஆசிரியர் கொலை

லக்னோ, நவ. 17

1948-ம் வருடம்வரை இலங்கை டெக்னிக்கல் கல்லூரி தலைமையாசிரியராக இருந்து வரும் அதன் பிறகு லக்னோ எஞ்ஜினியரிங் கல்லூரி தலைமை ஆசிரியராக இருந்துவந்த வருமான திரு. இ ஆர் பர்ட்லம் 13-ம் தேதியன்று இரவு 9 மணிக்கு மோட்டார் காரில் சென்றுகொண்டிருக்கும்போது அவரும் அவரது சேவகனும் குத்திக் கொல்லப்பட்டனர்.

இந்தியாவின்கைத்தொழில் திட்டம்

லண்டன், நவ. 17

பண்டிதநேரு சர்க்கார் இந்தியாவை மகத்தான கைத்தொழில் நாடாக்க 95 கோடிபவுண்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை'-பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 4உ
புதன்கிழமை

சிறந்த திட்டம்

தமிழன் தன் மானமே பெரிதென மதிப்பவன். எவனுக்கும் அடிமையாகஇருக்கவிரும்பமாட்டான். வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவேந்திர முனைவரைக்கும் இலங்கையில் ஆட்சி நடத்திய ஒரு அரசன் இருந்தால், அவன் தமிழன் தான். இதன் பின்பு அந்நியர் ஆதிக்கம் ஏற்படும் வரைக்கும் மூன்று தனியாட்சி நாடுகளைக் கொண்டதாகவே இலங்கை இருந்து வந்திருக்கிறது. பிரிட்டிஷாரால் கண்டி கைப்பற்றப்பட்டதும் ஆட்சி ஒரு கவர்னரின் கையில் ஒப்படைக்கப்பட்டது.

அக்காலத்தில் இலங்கை ஒரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகும். மக்கள் விழிப்படைந்ததும் அரசியலில் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இப்பொழுதும் அரசியல் சீர்திருத்தத்தின் பலனாகவே சோல்பரித் திட்டம் இலங்கைக்கு சமீபத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது. 1930-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட டொனமூர் அரசியல் திட்டத்தில் பிரதேச வாரியான பிரதிநிதித்தவம் முதன் முதலாகக் கிடைத்தது. இதன் பலனாக பெரும்பான்மையான சிங்களவர் கையில் அரசியல் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. சென்ற 16 வருடங்களாக சர்வசிங்கள மந்திரிசபை தர்பாரே நடந்தது அதுவும் கீழைத் தேச சிங்கள அரசியல் வாதிகளால்தான்! பிறனுக்கு என்றும் அடிமைப்படாத கண்டிச் சிங்களவரும் கூட அதிகாரமற்று இருக்க வேண்டிய நிலைமைஏற்பட்டது. சிறுபான்மையரான தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் யாவரும் அநாதைகளைப் போன்றே நடத்தப்பட்டு வந்தனர். காரணம்? அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்த சிங்கள அரசியல் வாதிகள் அத்தனை பேரும் வகுப்புவாதிகள். கீழைத் தேச சிங்கள ராஜ்யமே ஸ்தாபிக்கவேண்டும் என கனவு காண்பவர்கள். இதை வெளிப்படையாக பல தடவைகளிலும் கூறியிருக்கின்றார்கள்.

உண்மைத் தேசாபிமானிகள் இதை வெறுத்தனர். குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பமும் செய்தனர். சோல்பரி விசாரணைச் சபையினர் இங்கு வந்தார்கள் வெள்ளையறிக்கையும் வெளிவந்தது அடிமை வாழ்வையும், தங்கள் சுயகலத்தையும் கருதிய தமிழ்ப் பிரதிநிதிகள் சிலர் சிங்கள வகுப்பு வாதிகளுடன் சேர்ந்தனர். தன் தமையனைக் காட்டிக் கொடுத்த விபீஷணனுக்கு இராமன் இலங்கையை ஒப்படைத்தானல்லவா? அதே நிலைமை தங்களுக்கும் வரும் என்று நினைத்தார்கள் இத் தமிழர்கள். இவர்கள் ஒவ்வொருவராகச் சென்ற தேர்தலில் வீரத் தமிழ் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டனர். ஆயின் மூக்கு உள்ளவரைக்கும் சளி போகாது என்ற முறையில் பதவிமோகம்கொண்ட இரண்டு "முண்டாசுகள்" சிங்கள அதிகாரிகளிடம் தஞ்சம் புகுந்தனர். இவர்களின் உதவியுடன் தமிழருக்கு இந் நாட்டில் இடங் கொடோம் என்கின்றார்கள் அதிகாரக் திமிர் பிடித்த சிங்கள அரசியல் வாதிகள். அற்பமான கொடி விஷயத்தில் கூட சிங்களவர் கொடியாகிய சிம்மக் கொடிதான் உயர்த்தப்பட வேண்டும் என முனைந்து நிற்பவர்களென்றால், மற்றும் விஷயங்களில் சொல்லவா வேண்டும்.

இந் நிலைமை மானத்துடன் வாழும் தமிழரால் சகிக்க முடியாது. இவ்வடிமை வாழ்வை அகற்ற வேண்டும். சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த ஒரு கூட்டத்தில் காங்கேசன்துறைப் பிரதிநிதி இதற்கு ஒரு தக்க யோசனை கூறியிருக்கிறார் "மூன்று தனியாட்சி நாடுகளைக் கொண்ட கூட்டு அரசாங்கமே இன்று இலங்கைக்கு வேண்டுவது" என்கிறார் அவர். அதில் தான் சர்வ சுதந்திரத்துடன் தமிழ் மக்கள், மற்றும் எவராலும் மறுக்க முடியாத சுய நிர்ணய உரிமையை உபயோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் திரு. செல்வநாயகம் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

இந்த யோசனையை நாம் அப்படியே தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல மற்றும் கண்டிச் சிங்களவர், கீழ்ப்பிரதேச சிங்களவர் ஆகியோருக்கும் சமர்ப்பிக்கிறோம். சுதந்திரத்தை விரும்பும் எவனும் இதை நிராகரிக்க முடியாது. திரு செல்வநாயகம் கூறுகிறபடி, கீழ் மாகாணச் சிங்களவர் நாடு, கண்டியர் நாடு, தமிழர் நாடு ஆக மூன்று தனியாட்சி நாடுகளும் மத்தியில் ஒரு கூட்டு அரசாங்கமும் ஏற்படுத்தப்பெற்றால்ஒரு வரைஒருவர் அடிமைப்படுத்தும் வேட்கை அற்றேபோகும். முஸ்லிம்கள் ஒரு சமயம் தங்களைப் புறக்கணித்து விட்டதாக கூறக்கூடும். இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் ஒருவிதமான வித்தியாசமும் கிடையாது மதவித்தியாசம்தான் உண்டு. மற்றும்படி அவர்கள் தமிழர்கள் தான். அவர்கள் தமிழராகவே மதிக்கப்படுவர். ஆகவே அவர்கள் கவலை கொள்ள தேவையில்லை.

ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய தனியாட்சி நாடுகளும், மத்தியில் கூட்டரசாங்கமும் சுமுகமாக நடந்து வருவது கண்கூடு. அவர்கள் இதை "பெடரல் அரசாங்கம்" என்று கூறுவார்கள். சுவிட்சர்லந்து இலங்கையைப்போன்ற சிறிய நாடு. அங்கு இதே கூட்டரசாங்கம் நடைபெறுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கானடாவிலும்இம்முறையில்தான் ஆட்சி இருக்கின்றது சொந்த அதிகாரத்தையும், சுதந்திரத்தையும் தமிழர் பாதுகாத்துக் கொள்ளுவதாகவிருந்தால் தனியாட்சி நாடும், மத்திய அரசாங்கமும்தான் சிறந்ததாகும். இதை நிறுவுவதற்கு தமிழர் இன்றே முற்படுவாராக.

கலைச் சங்கத்துக்கு நிதி உதவி

சட்டத்தில் இடமில்லையென மேயர் பதில்

கண்டி, நவ 18

இலங்கை கலைச் சங்கத் தலைவர் சங்லக்தாஸ டி. மெல் காரியதரிசி டாக்டர் ஜி. பி மல்லசேகரா, தனாதிகாரி திரு எஸ் பரராஜ சிங்கம் ஆகியோர் கொழும்பு மேயர் திரு ஆர் எப். எஸ். டி. மெல் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் கலைச் சங்க நிதிக்கு கொழும்பு முனிசிபல் சபை நிதி உதவியளிக்க வேண்டுமென்று கோரியிருந்தனர். மேலும் தமது கடிதத்தில் கலைச் சங்கம் புரிந்துவரும் சேவைகள்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கொழும்பு மேயர் இதற்குப் பதிலளிக்கையில் கலைச் சங்கத்திற்கு நிதி உதவியளிப்பது பற்றி முனிசிபல் சபைச் சட்டத்தில் இடமெதுவும் இல்லையென்று கூறி அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கலைச் சங்கத்தினர் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று வரும் மான்யத்தை அதிகரிப்பது சம்பந்தமாக கல்வி மந்திரியைப் பேட்டி காண ஒரு தூதுகோஷ்டியை அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

மலேயாவில் இந்தியர் கடமை

மோரிஸ் தீவில் இந்தியர் அவதி

தென்னாப்பிரிக்க இந்தியர் சத்தியாக்கிரஹம்

சென்னை, நவ. 17

"மலேயாவின் ஜனத்தொகையில் இந்தியர்கள் 14 சத வீதம் தான் என்றாலும் அவர்கள் அங்கு முக்கியமான நிலைமையில் உள்ளனர். மலேயாவின் பிரஜைகளாக விரும்பும் இந்தியர்கள் தங்களைமலேயாகாரர்களாகவே கருத வேண்டும்" என்று மலேயாவில் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக இருப்பவரான ஸ்ரீ திவி நேற்று மாலை ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

விவேகானந்தா கல்லூரி கட்டிடத்தில் உலக விவகார இந்தியக் கவுன்ஸிலின் அங்கத்தினர் கூட்டத்தில் பேசுகையிலேயே ஸ்ரீ திவி மேலே கண்டவாறு கூறினார். "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைவர் பேசுகையில் மலேயா பிரச்னை உண்மையில் தென்னிந்தியாவின் பிரச்னை என்றும் மலேயாவிலுள்ள தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் தென்னிந்தியர் தான் என்றும் கூறினார். மலேயாவில் லேவா தேவி செய்வோரின் எதிர்காலம் பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில் இருஎக்ஸ்சேஞ் பாங்குகளில் இந்தியருக்கு ரூ 25லக்ஷம் முதல் போட்டுள்ளனர்என்றும் செட்டியார்களின் சொந்த லேவாதேவிசுமார் 10-15கோடி இருக்குமென்றும் கூறினார். மலேயா சர்க்கார் நியாயமாக நடக்கத் தயாராயிருப்பதுகண்டு தாம் மகிழ்வதாகக் கூறினார்.

யுத்தத்திற்குப் பின்

ஸ்ரீ திவி பேசியதாவது:-யுத்தத்திற்குப் பின்னர் மலேயா மக்களுக்கு ராணுவ மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. இந்திய தேசியக் காங்கிரஸ் தனது போராட்டத்தின்போது கடைப்பிடித்த முறையையே மலேயா தேசியகாங்கிரஸும் பின்பற்றுகிறது

மலேயாவிலுள்ள இந்தியர்கள் அந்நாட்டு மக்களாகவே ஆகிவிட வேண்டுமென அவர்கள் நினைக்கின்றனர்.

இந்தியர்களை மலேயாக்காரர்கள் வெறுக்கவில்லை. ஆனால் அவர்களைச் சுரண்டுவதற்காக நாம் அங்கு செல்லவில்லை என்ற மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படச் செய்ய வேண்டும். அதை பிரசவ விடுதிகள் ஏற்படுத்தல்போன்ற சமூக சேவைகள் செய்வதன் மூலம் சாத்தியமாக்கலாம்.

அங்குதொழிலாளர்கள்சட்டமூலமாக தங்களது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் வரை தொழிலாளர்கள் அங்கு போவதற்கு உள்ள தடை நீடிக்க வேண்டும். இப்போது தொழிலாளர்கள் இங்கிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டால்அங்குள்ள தொழிலாளரது ஒற்றுமையை அது குலைத்துவிடும். தொழிலாளர் நிலைமையும் வெகுவாக க்ஷீணித்துவிடும். இதன்மூலம் இந்தியர் கௌரவமே பாதிக்கப்படும்.

புரபஸர் ராமானுஜம் வந்தனோபசாரம் கூறினார்

மோரிஸ் தீவில் இந்தியர் அவதி

டர்பன், நவ. 17

மோரிஸ் தீவிலுள்ள ஒரு பிரபல இந்திய பாரிஸ்டர் ஸ்ரீ துருத்நாத்ராம்புல் விடுத்துள்ள அறிக்கையில் மோரிஸ் தீவுக்கு பிரபல இந்திய தலைவர்களை அனுப்பி அங்குள்ள இந்திய சமூகத்துக்கு யோசனை கூற வேண்டுமென்றும் அங்குள்ள இந்தியர்களின் பிரச்னையை பிரிட்டிஷ் சாக்காரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:- இந்தியர்கள் அங்கு நேர்மையாகநடத்தப்படவில்லை. அங்குள்ள இந்தியர்கள் தங்களுடைய சொந்த உழைப்பின் காரணமாக ஐரோப்பியர்களுக்கு சமமான நிலையை அடைந்துள்ளனர். ஆனால் அவர்களுடைய பொருளாதார சமூக முன்னேற்றத்தை அங்குள்ள மைனாரிட்டி ஐரோப்பிய சர்க்காரின் ஆதரவுடன் ஒடுக்கி வருகின்றன. அவ்விஷயத்தை நேரடியாக பிரிட்டிஷ் சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வந்து மோரிஸ் தீவிலுள்ள இந்தியர்களுக்கு இந்தியா உதவி செய்ய முடியும். மோரிஸ் இந்தியர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு பிரபல இந்திய தலைவர்களை அனுப்பவேண்டும்.

தெ. ஆ. இந்தியர் சத்தியாக்கிரஹம்

டர்பன், நவ 17

நேட்டால் இந்திய காங்கிரஸ் ஆக்டிங் தலைவர் ஸ்ரீ பி. டி. செட்டி நேற்று இரவு தென் ஆப்பிரிக்காவின் தடையை மீறி ஒரு முகாமில் குடியேறி சத்தியாக்கிரகம் செய்தார். அவருடன் ஸ்ரீமான்கள் ஆர். ஏ. பிள்ளை,பாதர், இன்னும் பலரும் சத்தியாக்கிரஹம் செய்தனர். அவர்களை போலிஸார் இன்னும் கைது செய்யவில்லை. பெரும் புயல் வீசியும் கனத்த மழை பெய்தும் கூட சத்தியாக்ரஹிகள் தாங்கள் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

சென்ற வாரம் விடுதலையடைந்த தாவுஸீதத் என்ற சத்தியாக்ரஹி விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:- நான் சிறையிலிருக்கும் பொழுது என்னிடம் ஒரு ஐரோப்பிய ஜெய்லர் சொன்னதாவது:-

நாங்கள் உன்னை திண்டாடவைப்போம்; உங்களுடைய பெண்டிர்பிள்ளைகளை கொன்று விடுவோம்; உக்களுடைய வீட்டைப் பொசுக்கி விடுவோம் என்று பயமுறுத்தினர்.

60 புதிய கார்கள் வந்து சேர்ந்தன

கொழும்பு, நவ. 17

பிரிட்டனில இருந்து வந்து நேற்று துறைமுகம் வந்து சேர்ந்த நாரில்கா என்னும் கப்பலில் 60க்கதிகமான புதிய கார்களும் 19 வான்களும் வந்து சேர்ந்துள்ளன.

பௌத்த விகாரைக்கு அருகே படமாளிகை

முனிஸிபல் சபை தீர்மானத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, நவ 18

கொழும்பு லெயாட்ஸ் பிரூட்வே பகுதியில் இருக்கும் பௌத்த விகாரைக்கருகே ஒரு படமாளிகையைக் கட்டுவதற்கு அனுமதியளிக்க முனிஸிபல் சபை அதிகாரிகள் தீர்மானித்ததை ஆட்சேபித்து கொழும்பு நகரிலுள்ள ஒப் எம். பி. ஏ. பௌத்த விகாரை நிர்வாகிகள், மற்றும் பௌத்த மத சங்கங்கள் எதிர்நடவடிக்கை எடுத்துள்ளனர். கொழும்பு மேயருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதுடன் பிரதம மந்திரி, மந்திரி சபையினர் எல்லோருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இப்பகுதியில் படமாளிகை கட்டுவதற்கு உத்தரவு வாங்குவதை ஏற்கமுடியாதென ஸ்தல ஸ்தாபன மந்திரி மேயருக்குத் தெரிவித்துள்ளார்.

லெயாட்ஸ் பிரூட்வேயில் பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அவென்யுவிற்குச் செல்லும் பகுதியில் ஜெட்டவினராம விகாரைக்குப் பக்கத்திலேயே புதிய தியேட்டருக்கு லைசென்ஸ் வழங்கப்பட. தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இது விஷயமாக முனிஸிபல் சபை அதிகாரிகள் புனராலோசனை செய்வார்களென்று தெரிகிறது.

வருமானத்தைவிட செலவு அதிகம்

செப்டம்பர் மாதத்திய கணக்கு விபரம்

கொழும்பு, நவ, 18

செப்டம்பர் மாதத்திய இலங்கை வருமானம் ரூ 57,248,958 ஆகும். ஆனால் இம்மாதத்தில் மொத்தமாக ரூ. 60,677,070 செலவாகியுள்ளது. 1946-ம் வருடத்தில் வருமானத்தைவிட செலவு ரூ. 22,798,914 கூடியிருக்கிறது இம் மாதத்தில் இலங்கையின் வரவுசெலவுத் திட்டத்தில் சுமார் 35 லட்சம் ரூபாய் துண்டுவிழுந்துள்ளதென நேற்றைய மாதாந்த வரவுசெலவு அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதில் கல்விப் பகுதிக்கே அதிகம் செலவாகிறதென்பது அறிக்கையிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

1948 ஆகஸ்ட் முதல் தேதிக்குள் பிரிட்டன் வெளியேறும்

பாலஸ்தீனப் பிரிவினைத் திட்டம்

அமெரிக்க-ரஷிய அபிப்பிராய ஒற்றுமை

நியூயார்க, நவ. 17

பாலஸதீன பிரிவினைத் திட்டத்தை அமுல் நடத்துவதுபற்றி இன்று ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே பூரணமான அபிப்பிராய ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. 1948 ஆகஸ்ட் முதல் தேதிக்குள பிரிட்டன் பாலஸதீனத்திலிருந்து வெளியேறும்.

பாலஸ்தீன சர்க்கார்

ஜெருசலேம், நவ. 17

பாலஸ்தீன சர்க்கார் இன்று கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறார்கள்:- பிரிட்டன் வெளியேறும்போது அது பாலஸதீன சர்க்கார் பணத்தை எடுத்துக்கொண்டு செல்லாது. அப்பொழுது யார் நிர்வாகத்தை ஏற்கிறார்களோ அவர்களிடம் சர்க்கார் ஆஸ்திகளும் கடன்களும் மாற்றப்படும்.

பிரிட்டிஷ் சோல்ஜர் மரணம்

சென்ற வாரம் ரிட்ஸ் ஹோட்டலில் யூதப் புரட்சிக்காரர்களால் சுடப்பட்டு காயமடைந்த ஒரு பிரிட்டிஷ் சோல்ஜர் நேற்றிரவு மரணமானார்.

லெபானன் குடியரசுத் தலைவர்

பாக்தாத், நவ. 17

லெபானன் குடியரசுத் தலைவர் கூரி நவம்பர் மாதம் 29-ம் தேதி இங்கு வந்து 4 தினங்கள் தங்கியிருப்பார். அவருடன் லெபானன் பிரதம மந்திரியும் பாதுகாப்பு மந்திரியும் வருவார்கள் அதேசமயத்தில்டிரான்ஸ்ஜோர்டான் மன்னர் அப்துல்லாவும் வருவார். ஈராக் மன்னரும் ஈராக், டிரான்ஸ்ஜோர்டான், லெபானன் பிரதமமந்திரிகளும் கூடி பாலஸதீன பாதுகாப்பு பற்றி ஆலோசனை செய்வார்கள்.

ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறுவது சம்பந்தமான பிரச்னையுட்பட ஈராக்கிற்கும் பிரிட்டனுக்குமுள்ள உடன்படிக்கை திருத்தியமைக்கப்படும். இது சம்பந்தமாக ஈராக் சர்க்கார் கோரிக்கைகளை ஈராக் பிரதம மந்திரி ஜபூர் அடுத்த மாதம் கூடும் ஈராக் பாராளுமன்றத்தில் அறிவிப்பார்.

ஈராக்கிலுள்ள இரு பிரிட்டிஷ் விமான தளங்களை நீக்குவது, ஈராக் ரயில்வேயின் பிரிட்டிஷ் ஆலோசனை அதிகாரிகளை விலக்குவது பாஸ்ரா துறைமுக சம்பந்தமான பிரச்னை ஆகியவைபற்றி புதிய உடன்படிக்கை ஏற்படும். (ராய்ட்டர்)

சாரணர் இயக்கத்தில் கவர்னருக்கு நம்பிக்கை

பலங்கொண்ட ஸ்தாபனமாக்க இளைஞர்களுக்கு வற்புறுத்தல்

கண்டி, நவ. 18

கண்டி ஜில்லா சாரணர் சிறுவர் இயக்க ஸ்தல சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மே. த கவர்னர் பேசுகையில், சாரணர் இயக்கத்தைப் பலங்கொண்ட ஸ்தாபனமாக்க இளைஞர்கள் முன்வரவேண்டுமென்றும், இளைஞர்கள் தங்கள் நல்வாழ்வை அமைத்துக்கொள்ள இந்த ஸ்தாபனம் சிறந்ததென்றும் இவ் வியக்கத்தில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் கூறினார். சாரணர் இயக்கங்களுக்கு நிதி உதவி முதலியனபற்றியும் கவர்னர் பேசினார்.

இலங்கையைப்பற்றி ஐரோப்பியருக்கு அதிகம் தெரியாது

அதிமேற்றிராணியார் கூற்று

கொழும்பு, நவ. 18

கொழும்பு அதிமேற்றிராணியார் சங் டாக்டர் வி பி. கூரே ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்து இலங்கை திரும்பியுள்ளார். ஐரோப்பாவில் பிரிட்டனைத் தவிர வெளியிடங்களில் இலங்கையைப்பற்றி அதிகமாக மக்களுக்குத் தெரியாதென்றும், கொழும்பு இலங்கைத் தீவில் உள்ள இடமென்று தெரியமாட்டாதென்றும் பிரச்சாரம் செய்யவேண்டுமென்றும் கூறினார். மேலும் இலங்கையின் பொது சர்க்கார் சேவையில் தகுதியானவர்களையே நியமிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

டிராமில் கொள்ளையடித்ததாக வழக்கு

எதிரிக்கு ரூபாய் 1500 பிணை

கொழும்பு, நவ. 18

சுதுகாவத்தையைச் சேர்ந்த ஆர் பீரிஸ் அப்பு என்பவர் டிராம் கார் பிரயாணி ஒருவரான திரு எம் வி. முத்தையா என்பவரிடமிருந்து ரூபாய் 235 கொண்ட பர்ஸ் ஒன்றைத் திருடும்பொழுது பிரஸ்தாப முத்தையா என்பவரால் உடனே பிடிக்கப்பட்டு போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் மீது களவுக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி தாம் குற்றவாளி யல்லவென்று கூறியதன்மேல் நீதிபதி எதிரியை ரூபாய் 1500 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கு விசாரணையை டிசம்பர் 5-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

வெள்ள- விபத்து; உள்நாட்டு யுத்தம்

அமெரிக்கா உள்நாட்டு யுத்தத்தை ஆதரிக்கிறது

மாஸகோ குற்றச்சாட்டு

மாஸ்கோ' நவ. 17

அமெரிக்கா சீனாவுக்கு 30 கோடி டாலர் உதவி செய்யப் போவதாகத் திட்டமிட்டுள்ளதுபற்றி நியூடைம்ஸ் பத்திரிகை சீன மக்களுக்கு எதிராக பிற்போக்குவாதிகள் நடத்தும் உள்நாட்டு யுத்தத்திற்கு உதவிபுரிய அமெரிக்கா முன்வந்துள்ளது" எனக் கூறுகிறது. இது சீன உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் அமெரிக்க கொள்கையை மேலும் உறுதிப்படுத்துவதாக அது கருதுகிறது.

அரசாங்க வெற்றிகள்

உள்நாட்டு யுத்தத்தில் கியாங்சு மாகாணத்திலும், மத்திய சீனத்திலும் சீன கம்யூனிஸ்ட் படைகள் பின்வாங்கியுள்ளன. ஹோப்பி மாகாணத்தில் கம்யூனிஸ்டுகள் தீவிரமாகப் போரிட்டு வருகின்றனர்.

கரிச் சுரங்க விபத்து

டென்ஸடினுக்குத் 90 மைல் தொலைவில் ஓர் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தின் காரணமாக 19 பேர் இறந்துபோனதுடன் 26 பேர் காயமுற்றுள்ளனர்.

வெள்ளப்பெருக்கால் பாதிப்பு

பார்மோசா தலைநகரான டைப்பெனில் ஏற்புட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக 9 பேர் இறந்தனர். 32,000 பேர் வீடின்றித் தவிக்கின்றனர். மொத்த நஷ்டம் 5 லட்சம் ஸடர்லிங் ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 145 மைல் நீளத்திற்கு ரயில்பாதை அடித்துக்கொண்டு போகப்பட்டது. அத்துடன் 3 லட்சம் ஏக்கர் நிலம் வெள்ளக் காடாகிக்கிடக்கிறது. (ராய்ட்டர்)

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை

ஐக்கிய தேச அரசியல்கமிட்டியில் இந்தியா தீர்மானத்திற்கு வெற்றி

பிரிட்டன், அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா எதிர்த்து வாக்களித்தன

நியூயார்க், நவ. 17

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை சம்பந்தமாக இந்தியா கொண்டுவந்த தீர்மானம் இன்று ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் விவாதிக்கப்பட்டு வோட்டுக்கு விடப்பட்டது. அதற்கு சாதகமாக 29 வோட்டுகளும் பாதகமாக 18 வோட்டுகளும் கிடைத்ததால் தீர்மானம் நிறைவேறியது.

பைலோரஷியா, சில்லி, சைனா, கொலம்பியா, செக்கோஸ்லவேகியா, எகிப்து, எத்தியோப்பியா, பிரான்ஸ, கௌதமாலா, ஹெயிட்டி, ஹாண்டுராஸ, ஆப்கானிஸ்தானம், இந்தியா, ஈரான், ஈராக், லெபானன், மெக்ஸிக்கோ, பாக்கிஸ்தான், பனாமா, பிலிப்பைன், போலந்து, சவூதி அரேபியா, சிரியா, துருக்கி, உக்ரைன், ரஷியா, வெனிசுலா, யேமன் யூகோஸ்லாவியா முதலிய நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன.

ஆஸதிரேலியா, பெல்ஜியம், கானடா, கோஸ்டாரிக்கா, டென்மார்க், லக்ஸம்பர்க், ஹாலந்து, நியூஜிலந்து, நிக்காருகுவா, நார்வே, சுவீடன் தென்னாப்பிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா, பாதகமாக வாக்களித்தன;

பொதுச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைக்க வேண்டும். இதற்காக பலத்த போட்டி நடைபெறும்.

தீர்மானம் நிறைவேறியது பற்றி சந்தோஷமுறுவதாக ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தெரிவித்தார்.

ஆசிய மக்கள் உரிமைச் சங்கத்தின் சார்பாக சங்கைக்குரிய மைக்கல் ஸகாட் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டைப் பாராட்டினார்.

இன்றைய விவாதத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பேசியபோது ரயிலில் ஐரோப்பியருக்கு மட்டும் என்று பிரித்து முத்திரையிடுவதுபோல மனித உரிமைகளிலும் வெள்ளையருக்கு மட்டும் என்று பிரிக்க முடியாது என்றும் தென்னாப்பிரிக்க இந்திய துவேஷச் சட்டங்கள் இந்தியாவுக்கு மட்டுமல்ல; ஆசியாவுக்கே அவமானம் உண்டாக்குபவையாகுமென்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜினி முகம்மது அழித்த சோமநாதர் ஆலயம்

"திரும்பக் கட்டப்படும்" இந்திய மந்திரிகள் வாக்குறுதி

ஜனாகத், நவ, 17

சரித்திரப் பிரசித்தி பெற்றதும் சுமார் தொளாயிரம் வருஷங்களுக்கு முன்பு, கஜினி முகம்மதுஎன்னும் படை எடுப்பாளரால், அழிக்கப்பட்டதுமான சோமநாதர் ஆலயத்தை, அது மீண்டும் தன் பழம்பெருமையை அடையும் விதத்தில் நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆலயம் ஜுனாகத் சமஸ்தானத்தில், சோமநாதபட்டணத்தில் கடற்கரையோரத்தில் இருக்கிறது.

உதவி பிரதமர் சர்தார் பட்டேலும், மாமாக்கு, சுரங்க இலாகா மந்திரி ஸ்ரீகாட்கிலும், நவநகர்ஜாம் சாஹிபுடன் இந்த ஆலயத்திற்கு விஜயம் செய்தனர். அப்பொழுதுதான் மந்திரி காட்கில் ஆலயத்தை திரும்ப நிர்மாணிக்க உத்தேசிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஆலயச்சை திரும்பக் கட்டுவதற்கு ரூ. 1 லட்சம் நன்கொடை அளிப்பதாக, ஜாம்சாஹிப் அப்பொழுது கூறினார். ஜுனாகத் போட்டி சர்க்காரின் தலைவர் ஸ்ரீ சாமல்தாஸ காந்தி ரூ. 51 ஆயிரம் நன்கொடை தருவதாகக் கூறினார்.

சர்தார் பட்டேல், அங்கு கூடியிருந்த மக்களிடம் பேசுகையில் புதவருஷதினத்தன்று, சோமநாதபுரம் ஆலயம் திரும்ப கட்டப்படும் என்ற செய்தி மிகவும் சந்தோஷகரமானது என்றும் ஜாம்சாஹிபும், ஜுனாகத் மக்களும், மன்னரும், புனர்நிர்மாண காரியத்தில் ஒத்துழைப்பார்கள் என்று நம்புவதாகவும் குபிட்டறிப்பார்.

கிராமக் கோர்ட்டுகள் தற்காலிக தலைவர்

சாவகச்சேரி, நவ. 17

நாளை முதல் 23-ம் தேதி வரையும் தென் மராட்சி, பச்சிலப்பள்ளி, கராச்சி-பூநகரி பகுதிகளின் கிராமக் கோர்ட்டுகளின் தற்காலிக தலைவராக சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். சிவராஜா என்பவர் கடமையாற்றுவார் என்று கூறப்படுகிறது.

உ
சிவமயம்
கொழும்பு கொம்பனித் தெரு
ஸ்ரீ சிவ சுப்பிரமணிய
சுவாமி கோவில்
கந்தஷஷ்டி 7-ம் திருவிழா
விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

இன்று 19-11-47 புதன்கிழமை காலை 9 மணி முதல் விசேஷ அபிஷேகமும் மாலை 7-30 மணிக்கு மேல் முத்துச் சப்பரத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வந்து தமதாலயம் சேர்வார். மெய் அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள். இங்ஙனம்,

குறிப்பு! உபயக்காரர்.

நாதஸ்வர வித்துவான் பழனி செட் பாண்ட் வாத்தியம்.
நகாரம் விசேஷ கச்சேரியும் நடைபெறும். (Advt)

கல்நீலை இமமலை! விலை நீலை அணுநீலை!
உலகிற்றீரக் குறளென்றோது
கலண்டர்

பலநிற்பினு மதுபோற் பாரோம்-
நிலவும் பரவு புகழ்மெய் கண்டான்
அச்சிற் பதிக்கும் இரு மெய்க் கலண்
டரதைத் தேர்.

-(பண்டிதர் தா. மு. பிள்ளை)

1948-ம் வருடத்து
மங்களகரமான
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்

வீடுகள், கந்தோர்கள், வித்தியாசாலைகள், வியாபார ஸ்தலங்கள் எங்கும் மங்களகரமாக விளங்கத் தருந்தது!

10X15 அழகிய படத்துடன் விலை ரூ. 1-75
முதுமொழிக் கலண்டர் 7X11 படத்துடன் சதம் 0-85
No. 1 டயறி ரூ 1-50
No. 2 டயறி ரூ. 0-85

பிந்தினால் கிடைப்பதரிது!

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P. O.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சியினர்

செவிடர்களுமல்ல! குருடர்களுமல்ல!

லண்டன் டைம்ஸ் அலட்சியமாக கருதுவது தவறு

நவம்பர் 17-ம் தேதி மாலை வெளிவந்த "லங்கா தீப" எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்:-

இலங்கைக்கு கிடைக்கப் போகிற புதிய அரசியல் திட்டம் எவ்வித குற்றம் குறையுமில்லாத டொமினியன் அந்தஸ்துதானென்று எங்கள் பிரதம மந்திரியார் சொல்லுகிறார். எனினும் இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அறிக்கைகளிலிருந்து தெரியக் கூடிய தென்னவென்றால், சகல அம்சங்களும் இன்னும் நிச்சயமற்ற நிலைமையிலேயே இருக்கிறதென்று முடிவு செய்யலாம். நாம் எடுத்துக் காட்டியபடி இன்னும் பரமரகசியமாய் இருக்கிற இரண்டொரு விஷயங்களைப் பற்றி துப்பு துலக்குவதற்கு "லண்டன் டைம்ஸ்" முயற்சித்திருப்பதாகத் தெரிகிறது. இலங்கைக்கு வழங்கப்படும் அரசியல் திட்டத்தை "டொமினியன் அந்தஸது" என்று சொல்லாமல் அதற்கு பதிலாக "பூர்ண பொறுப்பாட்சியைபெற்றுக் கொள்ளுவதற்காக" என்று சுதந்திர மசோதாவின் நகலில் முதலாவதாக குறிப்பிட்டிருக்கும் பிரமாணத்தை புரிந்து கொள்ள முடியாதபடி இருக்கிறதென்று நாம் எழுதினோம். இலங்கையை டொமினியன் ராஜயம் என்று கருதினாலும் கூட, அதில் குறைகுற்றம் இருப்பதாக "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை தெரிந்து கொண்டிருக்கிறது போலும்!

எனினும் அந்தப் பத்திரிகையின் கருத்தின்படி அது புரிந்து கொள்ள முடியாத குறைகுற்றம் அல்ல. டொமினியன் நாடுகளோடு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக இதுவரையும் நடவடிக்கை யெடுத்துக் கொண்ட காரியாலயத்தை "பிரிட்டிஷ் சாம்ராஜய ஐக்கிய நாடுகளின் அந்நியோந்நிய தொடர்புக்காரியாலயம்" என்னும் புதிய பெயரே வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் இந்தியா-கானடா-ஆஸ்திரேலியா ஆகிய டொமினியன் நாடுகள் சம்பந்தமான காரியங்கள் மாத்திரமல்ல, இலங்கை சம்பந்தமான காரியங்களும் இந்தக் காரியாலயத்திலேயே நடைபெறும். இதனால் இலங்கையின் புதிய அந்தஸ்திலும் பழைய டொமினியன் அந்தஸ்திலும் அந்நியோந்நியம் இருப்பதாக 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது.

"லண்டன் டைம்ஸ்" பத்திரிகை எடுத்துக்காட்டும் விளக்கத்தை இன்னும் ஒருபடி அலக்கிக்காட்டுவதற்கு இடமிருப்பதாகத் தெரிகிறது. ஆனபடியால், பிரச்சினையேயின்றி-இவற்றை ஒப்புக்கொண்டால் இதற்குமேல் எங்கள் பிரதம மந்திரியின் கூற்றை ஒப்புக் கொள்வதற்கு இலங்கை மக்கள் விரும்புவார்கள். இவை எப்படியானாலும், இலங்கைக்கும் "டொமினியன்" என்ற பெயர், இந்த சுதந்திர மசோதாவின்படி கிடைக்குமாவென்று விஷயம் தெரிந்த அநேகர் கேட்கிறார்கள். கிடைத்தாலும் அல்லாவிட்டாலும், இலங்கை போடு கொடுகல் வாங்கல் ஆரம்பிக்க முன்னரே, இதுவரைக்கும் இருந்த டொமினியன் காரியாலயத்தில், டொமினியன் என்ற பெயர் அகற்றப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இவைகளைப் பற்றி இனி மேலும் தொடர்ந்து பிரச்சினைகளைக் கிளப்புவதற்கும் ஆராய்வதற்கும் அவசியமாய் இருப்பதற்குக் காரணம், இரண்டு அரசாங்கங்களுக்கிடையேயும் பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் இவற்றைப் பற்றி பொதுமக்களிடம் எவ்வித விருப்பு வெறுப்புகளையும் அறிய முயற்சிக்காமலே இருந்ததேயாகும். அப்படித்தான் தேசமக்களின் வாக்குப் பலத்தால் அரசாங்கத்தை கைப்பற்றிய ஸ்ரீமான்கள் தேசமக்களின் மீது நம்பிக்கை வைக்காமல் நடவடிக்கை யெடுத்துக்கொள்வது குற்றமேயாம்.

இலங்கையின் சார்பாக பெற்றுக்கொள்வதற்கு, ஒப்புக்கொண்ட அரசியல் திட்டம் "பூர்ண டொமினியன் அந்தஸ்திற்கு" மிகவும் குறைவாகக் கூட இருந்த போதிலும் அதைப் பற்றி பொது மக்களுக்கு சொல்லாமல் இருப்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

இதுவரைக்கும் அதிகமான பிரச்னைகளுக்கிடமில்லாமல் இருந்த இன்னுமொரு முக்கிய விஷயம் இருக்கிறது. அதாவது யுத்தப்படைகள், கடற்படை, ஆகாய விமானத்தளம் ஆகிய இவை சம்பந்தமாக இரண்டு அரசாங்கங்களுக்கிடையே செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தமேயாகும். இந்த ஒப்பந்தத்தினால் இலங்கையின் அந்தஸதான து பிரிட்டிஷ் சாம்ராஜயத்தில் டொமினியன் பெயர் பெற்றிருக்கும் நாடுகளின் அந்தஸதினும் பார்க்க மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறது என்பது எமது அபிப்பிராயமாகும். இது சம்பந்தமாக லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை சொல்லுவதாவது, சுதந்திர மசோதாவைப் பற்றிய விமர்சனக்காரர்கள் அப்படிக் குறைவாக நினைத்தாலும், சாம்ராஜயத்தின் பாதுகாப்பை முன்னிட்டு செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தினாலுண்டாகும் பிரயோஜனம் இங்கிலாந்திற்கும் இலங்கைக்கும் ஒரே சமானமாய்த்தான் இருக்குமென்று கூறுகிறது. அவை எப்படித்தானாகட்டும், இங்கு நாம் கிளப்புகிற பிரச்னையென்னவென்றால் மற்ற டொமினியன் நாடுகளின் பாதுகாப்பு சம்பந்தமாக இது வரைக்கும் வழங்கப்பட்டிருந்த சுதந்திரம் இலங்கைக்கும் கிடைக்குமா? என்பதுதான்.

இது சம்பந்தமாக இலங்கைப் பார்லிமெண்டிலே பலத்த எதிர்ப்பு உண்டாகுமென்றும் இந்த எதிர்ப்பினால் பிரதம மந்திரியாரின் கட்சிக்கு எவ்வித ஹானியையும் உண்டாக்குவதற்கு முடியாதென்றும் மேலும் லண்டன் "டைம்ஸ்" கூறுகிறது. இக்கூற்றை பூரணமாக ஒப்புக்கொள்ளுகிறோம். எனினும் இலங்கைப் பார்லிமெண்டிலே அரசாங்கக் கட்சி அவ்வளவு அதிகப்படியாக இல்லாத போதிலும் எதிர்க்கட்சியினர் செவிடர்களும், குருடர்களுமல்லவென்பதை லண்டன் "டைம்ஸ்" அறிய வேண்டும். தர்க்க நிபுணர்களான எதிர்க்கட்சியினர் பலமாக வாதாடுவார்கள். கிளர்ச்சி பண்ணுவார்கள், ஒரு சமயம் சுதந்திர மசோதாவை பார்லிமெண்ட் ஒப்புக் கொள்ளாவிட்டால் பார்லிமெண்டைக் கலைக்க நேரிடுமென்பது நிச்சயம்.

பரீட்சை தினத்தில் மாணவர்கள் திண்டாட்டம்

மேற்பார்வையாளரும் இல்லை வினாப்பத்திரங்களும் இல்லை

களுத்துறை, நவ. 18

நேற்று முதல் எஸ். எஸ். எஸ். பரீட்சை ஆரம்பமாகிவிட்டதாகளுத்துறையில் பாலிகாவித்யாலயத்தில் ஒரு பரீட்சை மத்திய ஸதாபனம வைக்கப்பட்டிருந்தது. இங்கு 47 மாணவிகளும் 50 மாணவர்களும் (மொத்தம் 97 பேர்) பரீட்சையில் பங்கு பற்ற வந்திருந்தனர். ஆனால் இந்த பரீட்சை ஸதல மேற்பார்வையாளரோ அன்றி வினாப்பத்திரங்களோ இல்லாத காரணத்தினால் அதிக கஷ்டங்கள் ஏற்பட்டன. பரீட்சை எடுக்க வந்திருந்த மாணவிகள் தங்கள் பாடசாலை அதிபருக்குவிஷயத்தை அறிவித்ததன்மேல் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பரீட்சை நடைபெற்றதென்று கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியா வின் நிறத்திமிர்

மலாய் கணவர்கள் குடியேறத் தடை

சிங்கப்பூர், நவ. 17

யுத்தத்திற்குப் பிறகு ஆஸ்திரேலிய மனைவிகளுடன் ஆஸ்திரேலியாவிலேயே குடியேறியுள்ள 14 மலாய் மாலுமிகளை நாட்டைவிட்டு வெளியேறி விடும்படி ஆஸ்திரேலிய சர்க்கார் உத்தரவிட்டுள்ளது இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய- மலேயா சர்க்கார்களின் குடியேற்ற அதிகாரிகளுக்கிடையே இன்று இனவேற்றுமை சண்டை மூளுவதாயிருந்தது.

"ஆசியாக் காரர்களை ஆஸதிரேலியர் விரும்பவில்லையானால் மலேயாவும் ஆஸதிரேலியர்களை கண்டிப்பாக விரும்பவில்லை" என்று ஒரு மலேயா அதிகாரி கூறினார்.

இந்த மாலுமிகளெல்லாப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரஜைகளே. ஐரோப்பிய ரல்லாதார் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு ஒரு காமன் வெல்த் நாடு மற்றொரு காமன் வெல்த் நாட்டின் பிரஜையை உதைத்துத் தள்ளுவது காமன் வெல்த் உறவின் லக்ஷணத்தைக் காட்டுகிறது!" என்று சிங்கப்பூரிலுள்ள "ஸண்டே டைம்ஸ்" பத்திரிகை எழுதியுள்ளது.

இவ்விஷயம் பற்றி மலேயா ஸதாபனங்கள் ஆஸ்திரேலிய சர்க்காரிடம் பலத்த ஆக்ஷேபம் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முனிஸிபல் சபை காலி ஸதானம்

இருவர் போட்டியிடுகின்றனர்

கொழும்பு, நவ. 18

கொழும்பு முனிஸிபல் சபையின் கொட்டாஞ்சேனை மேற்கு தொகுதி அங்கத்தவரான திரு ஜி. ஆர். டி. சில்வா நீதிமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டதால் முனிஸிபல் சபை அங்கத்தவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருந்தார். இப்பொழுது இவருடைய இடத்திற்கு ஒரு உப தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது, சனிக்கிழமை இத் தொகுதிக்கு போட்டியிடுபவர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இத்தொகுதிக்கு திரு பீட்டர் கெனமனும், திரு. விக்கிரமசிங்க என்பவரும் போட்டியிடுகின்றனர். திரு. பீட்டர் கெனமனுக்கு குடை சின்னமும், திரு விக்கிரமசிங்காவுக்கு சைக்கிள் சின்னமும் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் தினம் குறிக்கப்பட வில்லையாயினும் இத்தேர்தல் அநேகமாக டிசம்பர் 13 ம் தேதி நடைபெறுமென எதிர் பார்க்கப்படுகிறது

குத்திக் கொலை செய்ய முயற்சித்ததாக வழக்கு

எதிரிகள் பிணையில் விடப்பட்டனர்

கொழும்பு நவ. 18

கிரான்ட்பாஸ் சென் ஜோஸப் வீதியைச் சேர்ந்த எச் ரூபன் பெரேரா என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த டி. ரூபன் பெரேரா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதற்கு உடந்தையாக அதேயிடத்தைச் சேர்ந்த கே. வில்ஸன் பெரேரா, டபிள்யூ. எல் பர்னாட் ஆகிய இருவரும் இருந்ததாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் இரு வி. டி. பண்டிதகுணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகளை தலா ரூ. 1500 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கை டிசம்பர் 1-ம் தேதிக்கு மாஜிஸ்டிரேட் ஒத்திவைத்தார்.

இலங்கைக்கு தென்னிந்திய வெங்காயம்

சென்னையில் இலங்கை உணவு கமிஷனர் முயற்சி

திரு. வி வி கிரியின் உதவி

கொழும்பு, நவ. 18

விலை உயர்வைக் கட்டுப்படுத்த வெங்காய ஏற்றுமதி மீது இந்திய சர்க்கார் தடை விதித்ததன் பயனாக இலங்கையில் வெங்காயத் தட்டுப்பாடு ஏற்பட்டதை முன்னிட்டு இலங்கையின் உணவு கமிஷனர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை சென்னை சென்று சென்னை சர்க்கார் உணவு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிவிட்டு இலங்கை திரும்பினார். உணவுக் கமிஷனர் திரு ஆழ்வாப்பிள்ளை இந்தியாவுக்குப் போவதற்கு முன்பே இலங்கையின் இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி. கிரி டில்லியிலுள்ள அதிகாரிகளைச் சந்தித்து இலங்கைக்கு 600 டன் விதை வெங்காயம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்குப்படி ஏற்பாடு செய்திருந்தார். இதற்கு சென்னை சர்க்காரும் அனுமதி அளிக்க வேண்டுமாதலால் திரு. ஆழ்வாப்பிள்ளை சென்னை சென்றார். அங்கு திரு வி. வி. கிரி திரு. ஆழ்வாப்பிள்ளைக்கு சென்னை சர்க்கார் உணவு அதிகாரிகளை அறிமுகம் செய்து வைத்தார். திரு. ஆழ்வாப்பிள்ளை சென்னை உணவு காரியதரிசியைக் கண்டு பேசிய பின் உணவு மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனையும் சந்தித்துப் பேசினார். இப்பொழுது இலங்கைக்குத் தேவையான வெங்காயம் ஏற்றுமதி செய்ய லைசென்ஸ் வழங்கும்படி சென்னை சர்க்கார் இந்திய சர்க்கார் ஏற்றுமதிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு சிபார்சு செய்திருக்கிறார்கள் சென்னை கூட்டுறவு சங்க ரிஜிஸ்டிரார் லைசென்ஸ கிடைத்ததும் ஒரு பெரிய கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் இலங்கைக்கு வெங்காயத்தை அனுப்பி வைப்பார். இலங்கைக்கு தேவைப்படும் வெங்காயத்தைப்பற்றி திரு. ஆழ்வாப்பிள்ளை சென்னை சர்க்கார் உணவுக் காரியதரிசியிடம் தனது கோரிக்கைகளைத் தெரிவித்துள்ளார். இன்னும் மூன்று வாரங்களுக்குள் ஒரு முடிவு ஏற்பட்டு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வெங்காயம் கிடைக்கும்.

சென்னை மாகாணத்திலிருந்து உடனே 1500 டன் கரும்பு வெல்லம் அனுப்பி வைக்கவும் சென்னை உணவுக் காரியதரிசி இசைந்துள்ளார்.

ஹிந்து வழிபாடு

புத்தகம் எழுதுவோருக்கு பரிசுத் திட்டம்

சென்னை, நவ. 17

ஹிந்து மதத்திலும் பண்பாட்டிலும் நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சிரத்தையுண்டாக்கத் தக்க புத்தகம் ஒன்று தமிழில் எழுதுபவருக்கு ரூ. 1000 பரிசாக அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புத்தகம் 12 பிராயம் முதல் 16 பிராயத்துக்குள் உள்ள பையன்களும் பெண்களும் படிக்கத் தக்கதாய் இருக்க வேண்டும்.

காகிதத்தில் ஒரு பக்கமே எழுதப்படலாகும். அச்சடித்த புத்தகம் டெம்மி ஆக்டோவோ அளவில் 128 பக்கங்களில் வரும்படியாக எழுதப்பட வேண்டும்.

1948 அக்டோபர் 1வ. க்குள் அடியில் கையொப்பமிட்டவரிடம் வந்து சேரும்படி நூலின் இரண்டு கையெழுத்துப் பிரதிகள் அனுப்பவேண்டும்.

கீழே காணப்படும் கனவான்கள் அடங்கிய சமூகமொன்று கிடைத்த பிரதிகளை பரிசீலனை செய்யும்.

ஸர். எஸ். வரதாச்சாரியார் திவான்பஹதூர், கே. சுந்தரம் செட்டியார், ஸ்ரீ. கே. பாலசுப்பிரமணிய ஐயர், ஸ்ரீ. ஸி. கே. சுப்ரமணிய முதலியார், டாக்டர் வி. ராகவன்.

விவரம் வேண்டுவோர்:-எம். சுப்பிரமணியன் ரிட்டயர்ட் அக்கௌண்டண்ட் ஜெனரல் "அமிருத விலாசம்" சென்னை 10 என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

போட்டோ ரஸிகர்களுக்கு ஒரு
அறிவித்தல்.
"பாரத் ஸ்டுடியோ"
படம் பிடிப்பவர்கள்
என்லார்ஜ்மெண்டுகள், சினிமா சிலைடுகள் செய்பவர்கள்
நவம்பர் மாதம் 19-ம் தேதி முதலாக
"ஹாஜி அமீதா" பில்டிங்ஸ்,
கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்
என்ற இடத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.
N. B:- தற்போதைய ஸ்டுடியோ சகலவிதமான மின்சார வசதிகளுடன் இரவு பகல் எந்நேரத்திலும் போட்டோ பிடிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது.
பாரத் ஸ்டுடியோ, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
புரோப்ரைட்டர்:- எம். சிவசுப்பிரமணியம், (ஜயாத்தம்பி)

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!
புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.
உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.
கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.
ஜி. ஸி. ரோச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்
QUEEN'S BRAND
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசவாரிப் பொறுப்பாட்சியுள்ள சுதந்திரக் கூட்டரசாங்கம்

குடியேற்றநாட்டு மந்திரிக்கு கண்டி சிங்களவர் தேசிய சபையின் மகஜர்

பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தினருக்கு அதன் பிரதிகள்

ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு குறைகளை சமர்ப்பிக்க கோரிக்கை

1815-ம் வருட கண்டியன் உடன்படிக்கையின்படி கண்டியர்களுக்கு வழங்க ஒப்புக்கொண்டிருக்கும் தேசிய சுதந்திர திட்டத்திற்கு புறம்பாக இத்தேசத்திற்கு வழங்கும் எவ்வித அரசியல் சீர்திருத்த திட்டத்தையும் நாம் எதிர்ப்பதோடு, இலங்கைக்கு பிரதேசவாரியாக ஆட்சிப் பொறுப்புடைய-சுதந்திரமுடைய - ஐக்கிய அரசியல் திட்டத்தை வழங்குமாறுகோரி ஓர் விண்ணப்பத்தை, கண்டியன் தேசிய அசெம்பிளி குடியேற்றநாட்டு மந்திரிக்கு அனுப்பியிருந்தது. எனினும் இவ் விண்ணப்பத்திற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை யென்று கவர்னர் காரியாலயத்திலிருந்து கண்டியன் தேசிய அசெம்பிளிக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் வருகிற வெள்ளிக்கிழமை இலங்கை சுதந்திர மசோதா சம்பந்தமாக இங்கிலாந்துப் பார்லிமெண்டில் நடக்கும் விவாதத்தில் கலந்து கொள்ளும்அங்கத்தினர்களுக்கு மேற்படி விண்ணப்பத்தின் நகல் அனுப்பப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

உடன்படிக்கையைப் பற்றி தொடர்பில்லாத விசாரணை

கண்டியன் தேசிய அசெம்பிளியின் காரியதரிசியான திரு பி. தொலபிஹில்ல வெளியிட்டிருக்கும் அந்த விண்ணப்பத்தில் கண்டியர்களின் 1815-ம் வருட உடன்படிக்கையைப் பற்றி சிறிதும் சம்பந்தப்படுத்தாமல் தயாரிக்கப்பட்டிருக்கும் சோல்பரி அரசியல் திட்டம் சட்ட விரோதமானதும், தகுதியற்றதுமாகும்.

சட்டத்தின்படி கண்டியர்களுக்கு வழங்கும் எல்லா உரிமைகளும் பறிமுதல் செய்யப்படுவதோடு, எதிர்காலத்தைப் பற்றிய சகல அபிலாஷைகளையும் சூன்யமாக்கக்கூடிய அரசியல் திட்டத்தை கண்டியர்களுக்கு நிர்ப்பந்தமாக வழங்குவதும், கண்டியன் உடன்படிக்கையையும், கண்டியர்களின் கோரிக்கைகளையும் அலட்சியம் செய்திருப்பதுபற்றியும் இந்தவிண்ணப்பத்தில் கடுமையாக கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றுக்கொன்று முரண்பாடு

மேலும் அவ்விண்ணப்பத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட அரசியல் திட்டத்திற்கு முரணாகவே பலாத்காரமாக எங்களுக்கு அரசியல் திட்டம் திணிக்கப்பட்டதைப்பற்றி இங்கிலாந்து அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்செய்கை உடன்படிக்கையின் வரத்துகளுக்கு மாறுபாடாய் இருப்பதோடு கண்டியர்களின் உரிமைகளுக்கு அடியோடு பங்கமுண்டாக்கக்கூடியதாய் இருக்கிறது. இவை யதார்த்தமாக சட்டத்தின் அயோக்கியமாவதோடு முதலிலிருந்து கடைசி வரைக்கும் நிந்தனையானதாய் இருக்கிறது.

அந்த விண்ணப்பத்தில் அடங்கிய கண்டியர்களின் குறைபாடுகளைப்பற்றி சில விஷயங்களாவன:-

கண்டியன் உடன்படிக்கையை அலட்சியமாகக்கொண்ட இன்னுமொரு அரசியலை வழங்கியது, கண்டியர்களின் கல்வியை வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது, அதன் தேசிய செல்வத்தை கண்டியர்களின் அழிவிற்கே உபயோகிக்கப்படுவதுடன் கண்டியரல்லாதாரின் அபிவிருத்திக்கே உபயோகப்படுத்துவது, கண்டியரின் செல்வத்தை கண்டியர் பிரதேசத்திற்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு செலவு செய்வதற்காக தேசிய நிலபுலன்களை விற்பது, காணி பூமிகளுக்கு உரிமை பாராட்டும் தனிச் சொத்துரிமையை நிராகரிப்பதற்கு சட்டமியற்றுதல், அந்நிய தேச தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பது ஆகியவைகளாகும்.

கண்டியர்களின் இக் குறைபாடுகள் அடங்கிய விண்ணப்பத்தை ஐக்கிய பரிசீலனைக்கு சமர்ப்பிப்பதற்கு கண்டியன் தேசிய அசெம்பிளி அனுமதி கேட்டிருக்கிறது.

சயாமிய மன்னரைக் கொலைபுரிய சதி

சங்க்ராம் வெளியிடும் தகவல்கள்

பாங்காக், நவ. 17

நவம்பர் 30-ம் தேதி ஆயுதங்களைக் கைப்பற்றி அதன் பின் சுவிட்ஜர்லாந்தில் இருக்கும் சயாமியமன்னரைக்கொலை புரியச் செய்யப்பட்டிருந்த ஓர் சதி, பாங்காக் நகர ராணுவத் தளகர்த்தரால் இன்று வெளியாக்கப்பட்டது.

கர்னல் சங்க்ராம் இது சம்பந்தமாக சுவிட்ஜர்லாந்தில் கல்வி பயிலும் சயாமிய மன்னருக்கு அறிவித்துள்ளார்.

மன்னர் ஆனந்தா கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் ஒரு கடற்படை உத்தியோகஸ்தர் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்று எண்ணப்படுகிறது. இதையும் சங்க்ராமே வெளியிட்டார். இவ் வுத்தியோகஸ்தர் தற்போது தலை மறைவில் இருக்கலாம்.

மன்னர் ஆனந்தா கொலை சம்பந்தமான கோஷ்டியே இவ் வாயுத சாலைச் சதியிலும் தொடர்பு கொண்டிருக்கவேண்டும். இவர்கள் குடியரசு சர்க்கார் ஏற்படுத்த திட்டமிட்டிருந்தனர் என்றும் சங்க்ராம் தெரிவித்தார்.

இச் சதிபற்றிய விபரங்கள் ஒரு நல்ல கல்வி கற்ற மனிதரால் கூறப்பட்டது. அவர் கூறியதைத் துணைகொண்டே சனிக்கிழமை சிலர் கைதுசெய்யப்பட்டனர். அரசரின் கொலை சம்பந்தமாக அரசாங்க விசாரணை ஒன்று நடைபெறுமெனத் தெரிகிறது.

இன்று சங்க்ராம் சர்க்காரின் ராணுவ அதிகாரிகள் பழைய சயாமியப் பிரதமர் பிரிதி பனோமியோங் வீட்டைச் சோதனையிட்டனர் அவர் இப்போது சிறை வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

மத்திய மாகாணத்தில் ரகசிய ரேடியோ

ஜபல்பூர், நவ 17

ஜபல்பூரிலுள்ள விசேஷ ஆயுதம் தாங்கிய போலிஸ ஸ்டோரில் மத்திய மாகாண சி ஐ டி. கள் இன்றிரவு திடீரென சோதனை போட்டனர். இதன்விளைவாக நான்கு ரகசிய ரேடியோ ஸெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ரேடியோ கருவிகளின் மூலம் ஒலிபரப்பமுடியும். அதுபோன்று செய்திகளைக் கேட்கவும் முடியும். இவை ரொம்பவும் சக்தி வாய்ந்தவை. இவை சரியானபடி வேலை செய்கின்றன,

ரகசிய ரேடியோக்களின் மூலம் சில செய்திகளை ஒலிபெருக்கிய சில நபர்களைக் கண்டுபிடிப்பதற்காக கடந்த சில வாரங்களாக மத்திய மாகாண போலிசார் ஜரூராய்ப் புலன் விசாரித்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

மத்திய மாகாண டெப்புடி போலிஸ இன்ஸபெக்டர் ஜெனரல் மாஜிஸ்டிரேட் ஆகியோரின் தலைமையில் நேற்றிரவு போலிசார் திடீரென இந்த ஸடோருக்கு வந்தனர். ரேடியோ கருவிகள் பிடிபட்டதை மாத்திரமின்றி இந்திய யூனியனுக்கு செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்த ஒருவனையும் கைது செய்தனர்.

உலக சமாதானத்திற்கு உள்ள வழி

'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா கட்டுரை

பணக்கார தேசங்களின் பொறுப்புபற்றி காந்திஜி

ஆமதாபாத், நவ. 16

மகாத்மா காந்தியின் 'ஹரிஜன்' பத்திரிகையின் இன்றைய இதழில் 'குறிப்புகள்' என்ற பகுதியில் 'வேற்றுமைகளை ஒழித்தல்' என்ற தலைப்பின் கீழ் கீழ்கண்ட விஷயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:-

'அடிப்படை கல்விபற்றிய பிரதேச ஆராய்ச்சி மகாநாடு சீனாவில் செப்டம்பர் மாதத்துவக்கத்தில் நடந்தது. இந்த மகாநாட்டுக்கு மகாத்மா காந்தி அனுப்பிய செய்தி இந்திய சர்க்கார் பிரசார இலாகா வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் இருக்கின்றது அந்த செய்தி பின்வருமாறு:-

"நேசதேச கல்வி, கலாச்சார ஸ்தாபனத்தார் கல்வி, கலாச்சார நடவடிக்கையின் மூலம் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்ட முயற்சி செய்கின்றனர். இந்த முயற்சிகளில் எனக்கு ஆழ்ந்த சிரத்தை உண்டு.

"இன்று உலகத்தில் பல தேசங்களிடையே கல்வியிலும் கலாசாரத்திலும் மிகப் பெரிய வேற்றுமைகள் இருக்கின்றன இந்த வேற்றுமைகள் இருக்குங் காலம் வரையிலும் உலகத்தில் மக்களுக்கு உண்மையான பாதுகாப்பும் நிரந்தர சமாதானமும் ஏற்பட முடியாது. என்பதை நான் மனப்பூரணமாக ஆதரிக்கின்றேன் கல்வியின் மையென்ற அந்தகாரத்தில் இருக்கும் அதிருஷ்டமற்ற தேசங்களிலுள்ள எல்லா குடும்பங்களுக்கும் கல்வி ஒளி பரவும்படிச் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் பொருளாதாரத்திலும் கல்வித் துறைபிலும் முன்னேற்றமடைந்திருக்கும் தேசங்களுக்கு ஒரு விசேஷப் பொறுப்பு இருக்கின்றது, என்றுநான் எண்ணுகிறேன். உங்கள் மகாநாடு பூரண வெற்றியடைவதாக. பொருளாதார நெருக்கடியாலும் இதர காரணங்களாலும் மக்களுக்கு போதிய கல்வி அளிப்பதற்கு வசதியற்றுக்கிடக்கும் தேசங்களிலுள்ள மக்களுக்கு சரியான முறையில் அமைந்த கல்வியை அளிப்பதற்கான, நடைமுறைக்கு உகந்த ஒருதிட்டத்தை வகுப்பீர்களென்று நான் நம்புகிறேன்."

மகாத்மா காந்தியின் இந்த ஆசிச் செய்திபற்றி மேற்படி அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"காந்திஜியின் ஆசிச் செய்தியை பிரஸதாப மகாநாட்டில் கூடியிருந்தவர்கள் மரியாதையுடனும் வணக்கத்துடனும் பெற்றுக்கொண்டனர். இந்த செய்தியை கூட்டத்தில் படித்த போது எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்

இத்தகைய உணர்ச்சியூட்டும் ஆசிச் செய்தியை அனுப்பியதற்காக நன்றி தெரிவித்து மகாநாட்டினர் காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினர்"

சாரநாதில் பௌத்த விழா

சரோஜினிதலைமைவகிப்பார்

கொழும்பு, நவ. 18

சாரநாதில் உள்ள மூனகண்டகுடி விகாரையின் 16 வது வருடாந்த விழா ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு தலைமையில் நவம்பர் 27-ம் தேதி நடைபெற இருக்கிறது.

மகாபோதி சங்கத்தின் தலைமையில் நடக்கும் இவ்விழாவுக்கு பர்மா, இலங்கை, திபேத சீனம், நேபாளம்முதலிய இடங்களில் இருந்து பெருவாரியாத திரிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூப்பன் இல்லாத துணி

கொழும்பு, நவ. 18

இந்தியா தவிர இதர நாடுகளில் இருந்து வரும் சலவை செய்யாத கோடித் துணி இனிமேல் கூப்பன் இல்லாமல் விற்கப்படும் எனத் தெரிகிறது.

ராய்ட்டர் செய்திகள்

கொச்சின் சீனாவின் தலைவர் அன்னாமில் டிசம்பரில் ஒரு மகாநாட்டை நடத்துவார். இதில் 150 பிரதிநிதிகள்பங்கெடுப்பார்கள். பிரெஞ்சு சர்க்காரிடம் புதிய அரசியல் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதே இதன் நோக்கம்.

* * *

ஐ. நா. சபையின் இந்தோனேஷியச் சமரசத் தூதுக் கோஷ்டியினர் இந்தோனேஷிய மக்கள் நீதியான நிரந்தர சமாதானத்தை நிலை நிறுத்த மிதமான ஒரு கொள்கையுடன் ஒத்துழைக்கமுன்வரவேண்டும்என்று ரேடியோமூலம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

* * *

ஆங்சான் கொலை வழக்கு விசாரணை ஒத்திபோடப்பட்டுள்ளது. இதில் முதலாவது எதிரியான ஊசா சார்பில் பிரிட்டிஷ் வழக்கறிஞரான தேர்ட்டிஸ பென்னட்கே ஸி. ஆஜராகவிருக்கிறார். அவர் வெள்ளிக்கிழமை பர்மா புறப்படுகிறார். இதுவே ஒத்திப்போடுவதற்குக் காரணம்.

* * *

பர்மாப் பிரதமர் தக்கின் நு ஒரு காரில் சென்று கொண்டிருக்கும்போது ஒரு ராணுவக்காரர் அதனைக் கடந்து சென்றது பிரதமரைக் கொல்லச் சதிநடப்பதாகப் பயந்த மெய்க் காவலதுப்பாக்கியால் சுட்டனர் இதன் காரணமாக இருபிரிட்டிஷார் இறந்தனர். இத்தவறுக்காக பர்மா அரசாங்கம் தனது துக்கத்தைத் தெரிவித்து, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க முன்வந்துள்ளது.

* * *

டென்மார்க்கிற்கு ரியகிரீன்லாந்தில் அமெரிக்கத் துருப்புகள் தங்கி இருக்க 1941-ல் அனுமதி அளிக்கப்பட்டது. இபோது இத்துருப்புகள் வாபஸ பெறப்பட்டுவிட்டன.

* * *

சூயஸ கால்வாயில் உள்ள ராணுவப் பாலம் டச்சுக்கப்பல் ஒன்று மோதியதால் உடைபட்டுவிட்டது. இப்பாலம் எகிப்துக்கும்,பாலஸ்தீனுக்குமிடையில் போக்கு வரவு சாதனமாய் விளங்கியது. பாலம் உடைந்ததால் கால்வாய்ப் போக்குவரவு பாதிக்கப்பட்டது.

* * *

"பிரபல சோஷியலிஸ்ட்வாதியும். சோவியத் கம்யூனிஸமும்-ஒரு புது நாகரீகம்" என்னும் அரிய நூலின் ஆசிரியருமான காலம் சென்ற சிட்னிவெப் அவரது மனைவியார் பிட்ரிஸ் வெப் ஆகியோரது ஞாபகச் சின்னம் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நிறுவப்பட இருக்கிறது.

* * *

டிசம்பரில் பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் இடையில்ஸடெர்லிங் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும்.

ஹைதராபாத் போட்டி சர்க்கார்

ராமானந்த தீர்த்தா தலைமையில் ஆரம்பமாகும்?

நாகபுரி, நவ. 15

சுவாமி ராமானந்த தீர்த்தா தலைமையில் (தக்ஷிண) ஹைதராபாத்தில் ஒரு போட்டி சர்க்கார் ஏற்படுத்த முயற்சி நடந்து வருவதாக இங்கே தெரிகிறது.

ஹிந்துஸ்தான் செஞ்சேனை தளபதி ஸ்ரீ மகன்லால பக்த போட்டி சர்க்காரின் ராணுவங்களுக்கு தளகர்த்தராக இருப்பார் என்றும் தெரிகிறது

பீரார் எல்லையில் நிஜாம் துருப்புகளின் அட்டூழியம்

அநேக கிராமவாசிகளை கொன்று குவித்தனர்

நாகபுரி, நவ. 15

ஹைதராபாத் சமஸ்தான பீரார் எல்லையில் பாசோராவுக்கு அருகே நிஜாம் சர்க்கார் படைகளைச் சேர்ந்த ஒரு பகுதியினருக்கும் எல்லை யோரமாக இந்திய யூனியனிலுள்ள ஜனங்களுக்கும் இந்த வார ஆரம்பத்தில் கைகலப்பு ஏற்பட்டது. அதன் விளைவாக கிராம வாசிகள் பலர் உயிரிழந்தனர். நிஜாம் துருப்புகள் ஒரு இரவு பூராவும் தீ வைப்பதிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம் எஸ் சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

சுதந்திர மசோதாவுக்கு கமியூனிஸ்டுகள் கண்டனம்

இந்தியா-பாகிஸதான் தென்கிழக்காசிய நாடுகளுடன் பிரதேசவாரிஒப்பந்தம்

பொதுக்கூட்டத்தில் திரு. கெனமன் பேச்சு

கண்டி, நவ. 18

மாளிகாவ முற்றவெளியில் இலங்கைக் கமியூனிஸ்ட் கட்சியின் பொதுக் கூட்டமொன்று டாக்டர் எஸ். ஏ. விக்கிரம சிங்கா தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் இலங்கை சுதந்திர மசோதாவையும் பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளையும் பலமாகக் கண்டித்து பலரும் பேசினர்.

திரு பீட்டர் கெனமன் பேசுகையில் அரசாங்க சபையில் 95 சத விகித ஸ்தானங்களை வைத்திருந்த யூ. என். பி. பொதுத் தேர்தலின் பின் 40 சத விகித ஸ்தானங்களையே பெற முடிந்ததென்றும் இதிலிருந்து பொது மக்களின் மனப்பான்மை வெளிப்படையாகத் தெரிகிறதென்றும் குறிப்பிட்டு விட்டு சுதந்திர மசோதாவையும் உடன் படிக்கைகளையும் பலமாக கண்டித்துப் பேசினார். மேலும் ஐக்கிய நகடுகளின் பாதுகாப்புச் சபையின் கீழ் இந்தியா, பாகிஸதான் தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றுடன் பிரதேசவாரியாக ஒப்பந்தங்களை இலங்கை செய்து கொள்ள வேண்டுமென்று அவர் கூறினர். இலங்கையில் பிரிட்டிஷ் அரசியல், இராணுவ சமூகப் பொருளாதார ஆதிக்கத்தை இல்லாமற் செய்ய வேண்டுமென்றும், இலங்கை பூரண சுயாட்சி நாடாக பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டுமென்றும் தொடர்ந்து பேசுகையில் கூறினர். இக் கூட்டத்தில் திரு. பிரேம்லால் குமாரசிரியும் பேசினர்.

சோவியத் கண்டனம் நிராகரிக்கப்பட்டது

பிரான்ஸ சர்க்கார் நடவடிக்கை

பாரிஸ், நவ. 18

சோவியத் முகாமை பிரெஞ்சு சர்க்கார் சோதனை இட்டதை எதிர்க்கும் முகமாக சோவியத் சர்க்கார் அனுப்பிய கண்டனம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இந்நிராகரிப்பை அந்நியநாட்டு மந்திரி பிடால்ட் அனுப்பினர்.

ரஷியாவுக்கு பிரெஞ்சுப் பிரஜைகள் சென்று குடியேறுவது இப்போ ரஷியாவில் உள்ள பிரெஞ்சுப் பிரஜைகள் பிரான்ஸ் திரும்ப அனுமதிக்கும் வரை, தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மார்செயில்ஸ் வேலைநிறுத்தமும் ராணுவக் காவலும் தொடர்கிறது பாரிஸில் இன்று இரும்புத் தொப்பி அணிந்த ராணுவ வீரர்கள் காவல் புரிந்தனர். இன்றுதான் இங்கு பேர் தேர்தல் நடக்கவிருக்கிறது. டிகாலின் சகோதரர் ஒருவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படலாம் என்று தெரிகிறது.

இது ஒருபுறம் நடக்க, மறுபக்கத்தில் புதிய அரசாங்கம் அமைக்கும் முயற்சி மிக தீவிரமாக நடைபெறுகிறது. (ராய்ட்டர்)

ரயில் கொள்ளையை தடுத்த சிறுவன்

யாழ்ப்பாண இரவுமெயிலில் நடந்த சம்பவம்

கொழும்பு, நவ 18

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த மெயில் ரயிலில் நேற்றிரவு ஒரு முதல் வண்டியின் சாளரம் வழியாக ஒரு திருடன் உட்புகுந்து 14 வயதான ஆர்.சுந்தரலிங்கம்என்னும் சிறுவனின் தொண்டையை நெரித்து சத்தம் போடாதிருக்கும்படி எச்சரித்ததாகவும் அச்சிறுவன் அத்திருடனுடைய பிடியினின்றும் தப்பி சத்தமிட்டதாகவும் ரயிலில் அந்த வண்டியில் பிரயாணம் செய்த திரு. கே. கனகரத்தினம், திரு. ஸி. வன்னியசிங்கம் (பாராளுமன்ற அங்கத்தினர்) இருவரும் சிறுவனுக்கு உதவி செய்ய சென்றனர் என்றும் உடனே திருடன் சாளரம் வழியாக வெளியேறி 20மைல் வேகத்தில் ஓடிய ரயிலினின்றும் குதித்து மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. சிறுவனது தொண்டையை திருடன் நெரித்த போது தமிழில் நன்கு பேசியதாகவும் சத்தம் போட்டால் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தியதாகக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ரயிலவே அதிகாரிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும் இதன் பின் திருடனைத் தேடியதாகவும் அந்த பெட்டியில் உள்ள படுக்கை விரிப்பொன்றில் கால டையாளம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இச்சிறுவன் இருந்த பெட்டிக்கு அடுத்தாற் போலிருந்த ஒரு பெட்டியில் செல்வந்தரான ஒரு நடன ஆசிரியை பிரயாணம் செய்ததாகவும் திருடன் அவரிடமிருக்கும் சொத்துகளைக் கொள்ளையடிக்கும் நோக்குடன் வந்திருக்க வேண்டுமென்றும் நம்பப்படுகிறது.

வெள்ளிக்கிழமை கவர்னர் கொழும்பு திரும்புவார்

கொழும்பு, நவ. 18

இப்பொழுது கண்டி அரசமாளிகையில் தங்கியிருக்கும் கவர்னர் வெள்ளிக்கிழமை 21-ம் தேதி காலை 9-30 மணிக்கு கொழும்பு புறப்படுவார். இவருடன் மூர் சீமாட்டியும் அந்தரங்க காரியதரிசியும் பாதுகாவலரும் உடன் வருவார்கள்.

கொழும்பு-பம்பாய் விமானப் போக்குவரத்து

நேற்று மகாநாடு நடந்தது

கொழும்பு, நவ. 18

உலக விமானப் போக்குவரத்து ஸ்தாபன பிரதிநிதிகளுக்கும் இலங்கை போக்குவரத்து மந்திரி திரு. ஜே எல் கொத்தலவலைக்கும் இடையில் நேற்று நடந்த மகாநாட்டில் இலங்கை-பம்பாய் விமானப் போக்குவரத்துபற்றி விவாதிக்கப்பட்டது. கொழும்பு விமானத்தை உபயோகிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இந்தியா பாராளுமன்றக் கூட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவாக்கூடிய பெரும்பெரும் கைத்தொழில் திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள் என்றும் அடுத்த மூன்று வருட காலத்தில் இத்திட்டங்கள் அமுல் செய்யப்படுமென்றும் அந்நிய நாடுகளின் மூலதனத்தையோ கடனையோ இந்தியா நாடாது என்றும் இந்தியா ஹை கமிஷனர் திரு வி. கே. கே; மேனன் தெரிவித்தார்.

சர்வதேச வர்த்தகம்

23 நாடுகள் செய்துகொண்ட வரி ஒப்பந்தங்கள் பிரசுரம்

நவம்பர் 29-ம் தேதி ஹாவனா மகாநாடு

லண்டன், நவ, 18

ஜினிவாவில் 7 மாத காலமாக ஆலோசனை நடத்தி 23 நாடுகள செய்துகொண்ட வர்த்தக வரி ஒப்பந்தங்கள் இன்று அந்தந்த நாடுகளின் தலைநகரங்களில் வெளியிடப்பட்டன. இந்த ஒப்பந்தங்களால் ஏற்படும் பெருவாரி பலன்கள் பின் வருமாறு:-

இரண்டு நாடுகளுக்கிடையே மட்டும் ஒப்பந்தங்கள் செய்துகொண்ட நாடுகள் பல நாடுகளுடன் இனி ஒப்பந்தங்கள் செய்துகொள்ள முடியும். அதனால் வரிகளையும் குறைத்துக் கொள்ளும். அமெரிக்கா தனது வரிகளை பல சாமான்கள் மீது குறைத்து அதனால் மற்ற நாடுகள் டாலர் சேகரிக்க வசதி செய்யும் டாலர் தேவைப்படும் நாடுகளின் சரக்குகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்கமளிக்கப்படும்

இதனால் உலக வர்த்தகத்தில் அபிவிருத்தியான நிலைமை ஏற்படும். நவம்பர் 29-ம் தேதி ஹாவனாவில் நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் சர்வதேச வர்த்தக சாசனம் இறுதியாக வகுக்கப்பட்டு ஊர்ஜிதமாகும். (ராய்ட்டர்)

நேரு ஜயந்தி

மண்டூர், நவ. 18

மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க பாடசாலையில் திரு. நாக விநகத்தை தலைவராகக் கொண்ட நேரு வீட்டார், இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் ஜெயந்தியை தலைமை ஆசிரியர் திரு. வே மயில்வாகனம் தலைமையில் 14-ம் தேதி கொண்டாடினர். திரு. கு. சித்திரவேலு, நேருஜியின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எடுத்துக் கூறினர். சங்கீத விருந்தும் அளிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையுடன் கூட்டம் நிறைவேறியது

* * *

கொழும்பு. நவ. 18

இராமநாதபுரம் மருத்துவர் முன்னேற்ற சங்கத்தின் ஆதரவின் கீழ் நேரு ஜயந்தி கொண்டாடப்பட்டது. திரு சு இசக்கிமுத்து தலைமை வகித்தார் திரு. ஆர். பி. செல்லையா நேருஜியின் படத்தைத் திறந்து வைத்தார். பலர் இக்கூட்டத்தில் பேசினர்.

சோனக வாலிப சங்க வருடாந்தக் கூட்டம்

காத்தான்குடி, நவ. 18

இலங்கைச் சோனக வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் திரு. எம். காஸ் முகம்மது தலைமையில் கூடியது. வருடாந்த அறிக்கையை காரியதரிசி சமர்ப்பித்தார். இதன் பின் சங்க புது நிர்வாகிகள் தெரியப்பட்டனர். ஜனாப் எம். காஸ முகம்மது (தலைவர்), ஜனாப் ஓய். ஏ. எம். இஸ்மாயில் (உபதலைவர்), ஜனாப் ஈ. அகமது லெப்பை (தனாதிகாரி), ஜனாப் ஏ. ஷாகுல ஹமீத (காரியதரிசி), ஜனாப் எச். எம். எம். அலியார் உபகாரியதரிசி) முதலியோர் தெரியப்பட்டனர்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 19உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கம்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org